பக்கங்கள் 8 விலை சதம் 30 ★★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 7 ஸபர் 28 இதழ்: 8

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-2-77

5 வருடங்கள் பூர்த்தியானதால்

# தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் கட்சியாகும்

## கூட்டணி அமைப்பாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

''தமிழர்விடுதலைக்கூட்டணி ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டு, கூட்டணியின் தேர்தல் சின்னமாக, உதயசூரியன் சின்னம் வழங்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

தமிழர் விடுதலைக் கூட்டணி ஸ்தாபக அமைப்பாளரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. கே. ஞானமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓர் இயக்கம், 5 வருடங்களாகப் பூரணமாகச் செயல்பட்டுவந்ததாகத் தேர்தல் ஆணையாளர் திருப்திப்பட்டால், அந்த இயக்கம் சட்டப்படி, அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டு, தனியான தேர்தல் சின்னமும் வழங்கப்படும்.

1971-ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் முதன் முதலாக முன்னாள் யாழ். மேயர் திரு. சி. நாகராசா தலைமையில் கூட்டணி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதாகவும், 5 வருடங்கள் பூரணமாகப் பூர்த்தியாகிவிட்டதாகவும் திரு. ஞானமூர்த்தி கூறினார்.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு. சி. நாகராசா (தமிழரசு), திரு. எம். சிவசிதம்பரம் (தமிழ்க்காங்கிரஸ்), திரு. சி. சுந்தரலிங்கம் (ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி), திரு. வி. நவரத்தினம் (சுயாட்சி கழகம்) ஆகியோரும் மற்றும் இளைஞர் பேரவை உறுப்பினரும் கலந்துகொண்டதாக அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் தயாரிக்கப்

(7-ம் பக்கம் பார்க்க)

# பேரவைக் கட்டிடத்தில் கூடிய எதிர்க்கட்சியினர்

## கூட்டத்தொடர் ஒத்திவைப்புக்கு கண்டனம் தெரிவித்தனர்

கொழும்பு, வியாழன்

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று காலை தேசிய அரசுப் பேரவைக் கட்டிடத்திலுள்ள எதிர்க்கட்சி அறையில்கூடி பேரவைக்கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சித்தலைவர்கள் தெரிவித்தகண்டனத் தீர்மானத்தை அங்கீகரித்தனர்.

இன்றைய கூட்டத்தில் முப்பத்தெட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். சில தினங்களுக்கு முன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துவெளியேறியஅவிசாவளை எம். பி. திரு. பொனி ஜயசூரியாவும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

சென்ற பதினைந்தாம் தேதி எதிர்க்கட்சித்தலைவர்கள் கூடி பேரவைக் கூட்டத்தொடர் திடீரென ஒத்திவைக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்தனர்.

தேசியஅரசுப் பேரவையின் கூட்டத்தொடரை ஒத்திவைத்ததற்குக் கண்டனம்தெரிவித்ததுடன் ''மக்கள் தங்களது இறைமையையும் ஜனநாயக உரிமைகளையும் தீவிரமாகப் பாதுகாத்துக்கொள்ளத் தயாராகவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்'' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை இன்று கூடிய எதிர்க்கட்சி எம். பி.க்கள் அங்கீகரித்தனர்.

## 250 தோட்டப்பாடசாலைகள் அடுத்த மாதம் சுவீகரிப்பு

### 500 ஆசிரியர் நியமனம்

கொழும்பு, வியா

250 தோட்டப் பாடசாலைகளை அடுத்தமாத முடிவுக்குள் சுவீகரிக்க கல்வியமைச்சுமுடிவு செய்துள்ளது.

தோட்டப் பாடசாலைகளை சுவீகரிக்கும் அரசின் திட்டத்தின் முதல்கட்டமாக இச்சுவீகரிப்புநுவரெலியாவிலுள்ள 297 பாடசாலைகளில் 145ம், பண்டாரவளையிலுள்ள 130 பாடசாலைகளில் 52ம் உட்பட கண்டி, இரத்தினபுரி மாவட்டங்களிலும் உள்ள 250 பாடசாலைகள் இப்போது சுவீகரிக்கப்படவுள்ளன.

சுவீகரிக்கப்படும் பாடசாலைகளில் தகைமைபெற்ற500ஆசிரியர்கள் அரசாங்க ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். (இ)

## 2 கிரிக்கட் டெஸ்ட்கள்

பிரிஸ்பேண், பெப். 17

மேற்கிந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான முதலாவது கிரிக்கட் டெஸ்ட் நாளை வெள்ளிக்கிழமை பிரிஸ்பேணில் ஆரம்பமாகின்றது.

ஆஸ்திரேலிய - நியுஸிலாந்து 1-வது டெஸ்டும் நாளை கிறைஸ்சேர்ச்சில் ஆரம்பமாகிறது. (இ

## வெளிநாட்டுநாணயமோசடி!

### இவர்களுக்கு அழைப்பு ஆணை

கொழும்பு, வியா

வெளிநாட்டுநாணயமோசடியில் சம்பந்தப்பட்டதாக மேலும் சிலருக்கு எதிராகவிசாரணைநடைபெறவுள்ளது. இவர்களை குற்றவியல் நீதிமன்றம் முன் ஆஜராகுமாறு 'சமன்ஸ்' விடுக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கே.கல்யாணசுந்தரம், ஓய்வுபெற்ற ரயில்வே பகுதி உத்தியோகத்தர் கே. எஸ்.வீரகத்தி, மலேசியபென்ஷனர் டி. சரவணமுத்து ஆகிய மூவரையும் குற்றவியல் நீதிமன்றம் விசாரணைக்குஅழைத்துள்ளது.

70,300 மலேசிய டாலர் சம்பந்தப்பட்ட 10 குற்றச்சாட்டுகள் இவர்களுக்கு எதிராகசுமத்தப்பட்டுள்ளன.

அத்துடன் எம். எம். முகமது, ஏ. எச். கே. வணிகசிங்க ஆகியோர் 500ஸ்ரேலிங்பவுண் சம்பந்தமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். காலி வர்த்தகர் ஒருவருக்கு எதிராக 301 ஜேர்மன் மார்க் சம்பந்தமாக வழக்குத் தாக்கலாகி உள்ளது.

எஸ். சோமசுந்தரம், எஸ். கணேசலிங்கம் ஆகியோருக்கு எதிரான அந்நிய செலாவணி மோசடி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (ஆ)

## காசிஆனந்தன் நடேசானந்தனுக்கு மட்டக்களப்பில் மகத்தான வரவேற்பு!

### நெரிசலில் இருவர் மூர்ச்சித்தனர்; ரயில் பெட்டிக் கதவுகள் சேதம்!

மட்டக்களப்பு, வியா.

சிறைமீண்டு மட்டக்களப்புக்கு வந்துசேர்ந்த இளைஞர் பேரவைத் தலைவர் கவிஞர் காசிஆனந்தனையும் திரு. நடேசானந்தனையும் வரவேற்பதற்காக மட்டக்களப்பு ரயில்நிலையத்தில் திரண்டிருந்த மக்கள்கூட்டத்தில்



இருவர் நெரிபட்டு மூர்ச்சையானார்கள். இவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. சிறைமீண்ட இளைஞர் இருவரையும் வரவேற்பதற்காகத் திரண்டிருந்த மக்கள்கூட்டத்தின் கட்டுக்கடங்காத ஆர்வம் ரயில்பெட்டிகளின் கதவுகள் சிலவற்றைச் சேதப்படுத்தியதுடன் பலருக்குச் சிறுசிறு காயங்களையும் ஏற்படுத்தியது.

ரயில்நிலையத்திலிருந்து கவிஞர் காசி ஆனந்தன் வீட்டுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். பின்னர் சமீபத்தில் விடுதலையாகிவந்த இளைஞர்களும் திரு. நடேசானந்தனும் கவிஞர் காசிஆனந்தனும் அமிர்தகழியிலிருந்து திறந்தமோட்டார்கார் ஒன்றில் நகரவீதிகளில் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டு திரு. நடேசானந்தனின் சொந்த இடமான கோட்டைக்கல்லாற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வழியெங்கும் இளைஞர், முதியோர், பெண்கள், குழந்

(8-ம் பக்கம் பார்க்க)

# கம்யூனிஸ்ட் கட்சி வெளியேற முடிவு

## பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதென்று மாஸ்கோ சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துவிட்டது.

கட்சியின் மத்திய குழு நேற்றும் இன்றும் கூடி நீண்ட நேரம் ஆராய்ந்தபின்னர் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதென்று கட்சியின் அரசியல் தலைமைப்பீடம்எடுத்தமுடிவை அங்கீகரித்தது.

''அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிகளுடன் சேராமல் தனிக்குழுவாகஇயங்குவதென்றும் அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளு

(7-ம் பக்கம் பார்க்க)

# யாழ். லயன் களியாட்டு விழா-77

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற் பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் வவனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] யாழ். அழகுராணிப்போட்டி, [17] மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..............................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..............................

விலாசம்: ..............................

வயது: ....................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற் கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

**பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்**

........................................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்
தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ
விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திக
திக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி
வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க
வேண்டும்.

# நோர்வே நிபுணர் குழு: பலாலியில் வரவேற்பு

மாவிட்டபுரம், வியாழன் நோர்வேயிலிருந்து இலங்கை விஜயம் மேற்கொண்டு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த நிபுணர்குழுவுக்கு விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கையின் மீன்பிடி அபிவிருத்திக்கு நிதியுதவி, தொழில் நுட்ப உதவி என்பன வழங்குவதுபற்றி ஆராய்வதற்காக நோர்வேயிலிருந்து திருவாளர்கள் ஆரோஆதரசன், வட்லசன், டால், ரெக்ஸ் கோல்ட்ர்மயர் ஆகிய நிபுணர்களையும் மற்றும் அதிகாரிகளையும் கொண்ட குழு நேற்று புதன்கிழமை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த போது யாழ். அரசாங்க அதிபரும், காரைநகர் சீநோர் அபிவிருத்தித் திட்ட முகாமையாளருமான திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலா முதலில் மாலை சூட்டி வரவேற்க அதையடுத்து சீநோர் திட்ட இயக்குநர் திரு. சுவபிள்லொஸ்னஸ், முகாமையாளர் க. பாலச்சந்திரன், வலி-வடக்கு அரசாங்க அதிபர் திரு. ந. அமிர்தசாகரன், திரு. ஸ்ரனிஸ்லஸ் யாழ். மாவட்ட கடற்றொழில் அதிகாரி ஆகியோர் மாலைகள்அணிவித்து வரவேற்றனர்.

தமிழ்மக்களின் பாரம்பரிய மங்கள இசையான நாகசுரதவில் வாத்தியங்களுடன்அவர்கள் வரவேற்கப்பட்டபோது அவர்கள் இவ்விசையை மிக அவதானமாகக் கவனித்து சில நிமிடங்கள் விமான நிலையத்தில் தாமதித்துக் கேட்டு ரசித்தனர்.

இதையடுத்து குருநகர் வலைத்தொழிற்சாலை, காரை நகர் சீநோர் அபிவிருத்தித்திட்டம் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

குருநகர் வலைத்தொழிற்சாலைக்குத் தொழில்நுட்ப உதவிகள் அளித்தல், சீநோர் அபிவிருத்தித் திட்டத்துக்கு மீன்பிடி றோலர்கள் வழங்குதல், நிதியுதவி செய்தல் ஆகியன பற்றி இவர்கள் ஆராய்ந்தனர்.

# 6 பிள்ளைகளின் தாய் கோரக் கொலை

நீர்கொழும்பு, வியாழன் ஆறு பிள்ளைகளின் தாய் ஒருவர் கவ்வாத்துக்கத்தியால் வெட்டிக் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

மாரவில வபாலிஸ் பகுதியைச் சேர்ந்த இஹலபலஹபிட்டிய என்ற இடத்தில் வசித்த எம். ஏ. சீலாவதி (35 வயது) என்ற பெண்ணே இவ்வாறு கொலையுண்டவராவார்.

பொலிஸ் விசாரணையின் போது, கொலையுண்டவர்சம்பவதினம்அவரது அயல்வீடொன்றின் வளவுக்குள் சென்றுதமது பிள்ளைகளுக்கும்வேறு சிலருக்குமிடையே நடந்த சண்டை ஒன்று பற்றி விசாரித்ததனையடுத்தே இக்கத்திவெட்டு நடைபெற்றதாகத் தெரியவந்துள்ளது.

இக்கொலை தொடர்பாகப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரைக்கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர்.

மாரவில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. நிமல் மடிவக தொடர்ந்து விசாரணை புரிகின்றார். (உ)

## கோட்டு விற்னவு விளம்பரம்

இல. ஈடு/14404
சின்னத்தம்பி கதிரவேலு, நவாலி, மானிப்பாய்
வாதி

எதிராக
1. வல்லிபுரம் கனகரத்தினமும் பெண் (2) நல்லம்மாவும், இருவரும்.
உடுவில் றோட்டு, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
பிரதிவாதிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 14404-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோர்ட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1977-ம் ஆண்டு மாசி மாதம் 23-ம் திகதி (23-2-77) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 3,660/- 7-6-74 தொடக்கம் 3-10-74 வரைக்கும் ரூபா 3,000/-க்கு 12 வீத வட்டியும் அதற்குப் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும், வழக்குச் செலவு ரூபா466/55 சகம் இதில் ரூபா 75/- கழித்து.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று, மானிப்பாய் இறை 'ஆள்வான் கூரியன் தோட்டம்' நிலப்பரப்பு 23, குளி 4 இதில் வடமேற்குப் பக்கமாக நிலபரப்பு 3, இந்த நிலபரப்பு மூன்றுக்கு எல்லை கிழக்கும் தெற்கும் மீதியாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு பொன்னம்பலம் காங்கேசுக்கும் சகோதரிக்கு முரிய ஆதனங்கள் இதடங்கலும்.

**வே. கோபாலபிள்ளை**
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

22, ஆஸ்பத்திரி வீதி
கொட்டடி,
யாழ்ப்பாணம். 5493


## வேலை பழகுபவர்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை பழகுவதற்கு ஆட்கள் உடனடியாகத் தேவை. வேலை பழகும் காலத்தில் சம்பளம் கொடுக்கப்படும். கூடிய கெதியில் வேலை பழகி முன்னேறக்கூடிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டு அதற்கேற்ற சம்பள உயர்வும் கொடுக்கப்படும்.
உடனே நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி. 5481



## வரி விளம்பரம்

### கல்வி

பட்டதாரிஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுப்பார்கள். பெண்களுக்கு மட்டும் மத்திய ஸ்தலத்தில் இலவச ஆங்கிலக் கல்வி கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5379, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5379

### தேவை

O/L பகல், H. N. C. E., N.C.G.E. 8, 7வகுப்புகளுக்கு நீராவியடி தபாற் கந்தோரிலுள்ள கல்வி நிலையத்தில் கற்பிக்க விரும்புவோர் தகைமை, விரும்பும் வகுப்பு, பாடம், நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டு 26-2-77க்கு முன் தொடர்புகொள்க. வகுப்புகள் 1-3-77இல் ஆரம்பமாகும். சி. தயானந்தசிவம், 17/2, ஐயனார்கோவில்வீதி, வண்ணார்பண்ணை. 5500

அனுபவமும் திறமையும் மிக்க 35 வயதுக்கு மேற்பட்ட லொறி செலுத்தும் அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் சாரதி ஒருவர், வான் செலுத்துவதற்குத் தேவை. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும். நேரிலும் தொடர்புகொள்ளலாம். ஸ்ரான்லி பேர்னிஸிங் மார்ட், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5498

### விற்பனைக்கு

''தாரணி'' பெப்ரவரி இதழில் ஜி. ஜி. க்கு அஞ்சலி, சாயிபாபா ஆட்களை உயிர்ப்பித்தார் - ஆகிய பல சிறப்பம்சங்களுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. 'தாரணி' சரவணை, வேலணை. 5489

வின்செஸ்டர் துவக்கு (லைசென்ஸ் உள்ளவர்களுக்கு) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- தி. ராஜசூரியர், 68/2, இராசாவின் தோட்டம் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 5497


## யாழ். மாநகராட்சி மன்றம் அறிவித்தல்

பாலர் பாடசாலை ஆசிரியை நியமன விண்ணப்பம் சம்பந்தமாக 'ஈழநாடு' பத்திரிகையில் 14-2-77 ஆம் திகதி வெளியாகிய அறிவித்தல் தொடர்பாக கீழ்க்கண்ட விடயங்களும் விண்ணப்பதாரர்களின் அறிவித்தலுக்காக வெளியிடப்படுகின்றன.

(1) விண்ணப்பதாரர் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல்வேண்டும்.
(2) நியமிக்கப்படும் ஆசிரியைக்கு மாதாந்தப்படியாக ரூபா 75/- மட்டுமே வழங்கப்படும்.
(3) நியமனம் முற்றிலும் ஓர் அமைய அடிப்படையிலேயே அமையும்.
(4) நியமனம் பெறுவோர் நிரந்தர தன்மை முதலான உரிமைக் கோரிக்கை எதற்கும் உரித்துடையவராகார்.

**ஏ. ஏ. யோசேப்,**
விசேட ஆணையாளர்,
யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்.
மாநகராட்சி மன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
17-2-77. 5501

## இந்திய லோகசபைத் தேர்தல்

# வேட்புமனுத் தாக்கல் முடிந்தது!

# 490 இடங்களில் காங்கிரஸ் போட்டி

புதுடில்லி, பெப். 17

**இந்திய லோகசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசி நாள் இன்றுடன் (17-ம் திகதியுடன்) முடிவடைந்தது. வெவ்வேறு மாநிலங்களில் நேற்று நிறையப் பேர் தங்கள் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.**

உத்தரபிரதேஷில் ராய்பரேலியில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது நியமனப்பத்திரத்தை இன்று தாக்கல் செய்தார். தேர்தல் பிரசாரத்திலும் கலந்துகொள்ளும் பொருட்டு புதுடில்லியில் இருந்து திருமதி இந்திராகாந்தி இன்று விமானமூலம் உத்தரபிரதேஷ் வந்து சேர்ந்தார்.

மொத்தம் 542 தேர்தல் தொகுதிகளில் 490 இடங்களில் ஆளும் காங்கிரசும் ஆதரவுக்கட்சிகளும் போட்டியிடுகின்றன.

இவர்களுள் 252 பேர் கலைக்கப்பட்ட லோகசபை உறுப்பினர்கள், 16 பேர் ராஜ்ய சபா உறுப்பினர்கள், 37 பேர் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சட்டசபை மெம்பர்கள்.

490 பேர்களுள் 22 பெண்கள் உள்ளனர்; 50 பேர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்.

இன்று காலை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி பீகாரில் 36 தொகுதிகளில் 102 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். மேற்குவங்காளத்தில் 42 இடங்களுக்கு 92 பேர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

### ஜெகஜீவன்ராம்

இந்திரா அமைச்சரவையிலிருந்து அண்மையில் விலகிக்கொண்ட அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராமும் தமது நியமனப்பத்திரத்தை இன்று தாக்கல் செய்தார்.

### வடசென்னையில் அ. அ. தி. மு. க. மனோகரன்

வடசென்னைத் தொகுதியில் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த மனோகரன் தமது வேட்பு மனுவைதாக்கல்செய்தார். மத்திய வீட்டுவசதி அமைச்சர் எச். கே. எல். பகவத் டில்லியில் தமது அபேட்சகர் பத்திரத்தைதாக்கல்செய்தார்.

### ஆந்திரபிரதேச கவர்னர்

ஆந்திரபிரதேச கவர்னர் ஆர். வி.பண்டரோ பம்பாய் வடக்கில் போட்டியிடுகிறார். இதனால் ஆந்திரபிரதேஷ் கவர்னராக தலைமை நீதியரசர் நியமனம் பெற்றுள்ளார். தலைமை நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.சாம்பசிவராவ் நியமனம்பெற்றுள்ளார். (ஆ)



### கேரள முதல்மந்திரி போட்டியிட மாட்டார்

திருவனந்தபுரம்,பெப்.17

கேரளமுதல்மந்திரி அச்சுதமேனன் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

உடல்நலக்குறைவு காரணமாகத் தாம் இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்தார்.

திருவனந்தபுரத்தில் திடீரென இத்தகவலை அவர் அறிவித்தார். (ஆ)

### லால்பகதூர் சாஸ்திரியின் மகனும் போட்டி

புதுடில்லி, பெப். 17

முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் புதல்வரும் தேர்தலில் குதித்துள்ளார். இவர் தமது சொந்தஇடத்தில் தமது வேட்பு மனுவை இன்று தாக்கல் செய்தார்.

போட்டிமனு தாக்கல் செய்தவர்களில் பிரம்மானந்தரெட்டி, ரகுராமையா, சஞ்சீவரெட்டி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். (ஆ)

### கவர்னருக்கு மேலும் ஒரு ஆலோசகர்

சென்னை, பெப். 17

தமிழ்நாடு கவர்னர் சுக்காடியாவின் ஆலோசகராக மேலும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. ரி. வி. கார்த்திகேயன் என்பவர் மூன்றுவது ஆலோசகராக நேற்றுப் பதவியேற்றார்.

திரு. தபேயும், ஆர். வி. சுப்பிரமணியமும் ஏற்கனவே கவர்னரின் ஆலோசகராக இருந்துவருவது தெரிந்ததே.

# காலையில் தி.மு.க. அரசுக்கு

## புகழ்மாலை; மாலையில் கவிழ்ப்பு!

## இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, பெப். 17

'காந்தியவழியில் நடக்கிற ஆட்சி என்று காலையில் தமிழக கவர்னர் காந்திமண்டப விழாவில் பேசுகிறார். மாலையில் ஆட்சி கவிழ்க்கப்படுகிறது! இந்த ஒன்பதுமணி நேரத்துக்குள்ளாகவா கழக அரசு கெட்டுப்போய்விட்டது' என்று சென்னை சீரணிப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் கேட்டார்.

ஒரு மாநில அரசைக் கலைக்க வேண்டுமானால் நான்கு காரணங்களினால்தான் கலைக்கமுடியும் என்று இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது. அந்த நான்கு காரணங்களுள் ஒன்றுகூட கழக ஆட்சியைக் கலைத்த விவகாரத்தில் பொருந்திவராது என்று அவர் குறிப்பிட்டார். '4 கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியை ஒருகாரணமும் சொல்லாமல் அதிகாரம் இருக்கிறது, கலைக்கக்கூடிய உரிமை இருக்கிறது என்பதற்காகக்கலைத்தார்கள்'.

'அண்ணா ஆண்ட 2 ஆண்டுகள், அதற்குப்பிறகு கலைஞர் ஆண்ட 7 ஆண்டுகளில் ஆட்சியில் இன்னகுறைபாடு இருக்கிறது லஞ்சஊழல் இருக்கிறது—நிர்வாகக்குறைபாடு இருக்கிறது என்று சுட்டிக்காட்டி இந்தியப் பிரதமரிடமிருந்து ஒரு கடிதம் வந்ததா? உள்துறை அமைச்சரிடமிருந்தோ அல்லது துணை அமைச்சரிடமிருந்தோ மாநில ஆளுநர்மூலமோ இன்ன குறைபாடு நடந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி ஒரு குறிப்பாவது அனுப்பப்பட்டதா? என்று நாவலர் கேட்டார். ஒன்றுமே இல்லாமல் அரசைக் கவிழ்ப்பதுதான்இநத நாட்டு ஜனநாயகமா? என்றுர் அவர்.

1971ம் ஆண்டு முதல் 1976 வரையுள்ள காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல்துறை அதிகாரிகள் கலந்துகொண்ட பலமாநாடுகளில் தமிழ்நாடு கவர்னர் திரு. கே. கே. ஷா, தி. மு. க. அரசை வெகுவாகப் பாராட்டிப்பேசிய பேச்சுக்களை திரு. இரா.நெடுஞ்செழியன் இக்கூட்டத்தில் நினைவு கூர்ந்தார். (ஆ)

## தமிழ்நாடு கட்சிகளுடன் தேர்தல்கமிஷனர் ஆலோசனை

சென்னை, பெப். 17

தமிழ்நாடு பிரதம தேர்தல் கமிஷனர் திரு. சுவாமிநாதன் இன்று சகல அரசியல் கட்சித் தலைவர்களுடனும், அரசாங்க உயர் அதிகாரிகளுடனும் தேர்தல்ஏற்பாடு சம்பந்தமாக கலந்துரையாடினார். இதில் கவர்னர் சுக்காடியாவும் பங்குபற்றினார்.

தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்திமுடிக்க சகலரினதும் ஒத்துழைப்பை தேர்தல் கமிஷனர் நாடினார்.

கம்யூனிஸ்ட்கட்சி, தி.மு.க., அ. அ. தி. மு. க., குடியரசுக் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, சுதந்திராக்கட்சி, இந்திய முஸ்லிம்லீக், பாரத லோக்தக், ஜனநாயகக்காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ் உட்பட சகல கட்சித் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டதாக தேர்தல் கமிஷனர் அறிவித்தார். (ஆ)

## "விஜயலட்சுமி பண்டிட்டின் கருத்துவேறு பாடு புதியதல்ல நேருவுடன்கூட பிரச்னைப்பட்டவர்"

### பிரதமர் இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, பெப். 17

தமது தகப்பனாரின் சகோதரியான திருமதி விஜயலட்சுமி பண்டிட் கடந்த காலங்களிலும் தங்களுடன் கருத்துவேறுபாடு வைத்திருந்ததாகவும், தற்போது அவர் எதிர்க்கட்சியினருக்கு ஆதரவு தெரிவித்திருப்பது புதுமை அல்ல என்றும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

தமது தந்தையாருடன் கூட அவர் இதேமாதிரி கருத்து வேறுபாடு கொண்டிருந்தார் என்று திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

அமரர் லால்பகதூர் சாஸ்திரி பிரதம மந்திரியாக இருந்த போதும் திருமதி விஜயலட்சுமி பண்டிட் முட்டுக்கட்டை போட்டார் என்றும் பிரதமர் சொன்னார்.

தற்போது ஜெகஜீவன்ராமின் ஜனநாயக காங்கிரசுக்கு இவர் ஆதரவு தெரிவித்திருப்பது புதுமையான காரியமில்லை என்றார் பிரதமர். (ஆ)

## சங்கம் ஆரம்பிக்கப்பட்ட உடனேயே 20 லட்சம் கடனுக்கு அங்கீகாரம்!

### தி மு.க.அமைச்சர் ஆதித்தனார்மீதுகுற்றச்சாட்டுவிசாரணை

சென்னை, பெப். 17

தி. மு. க. அரசின் தமிழ்நாடு முன்னாள் கூட்டுறவு அமைச்சர் வி. பி. ஆதித்தனார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை இன்று சர்க்காரியா கமிஷன்முன் நடைபெற்றது.

இதில் விவசாய கூட்டுறவுப் பணிப்பாளர்சாட்சியமளிக்கையில்,கூட்டுறவுச்கடனுதவிசசங்கங்கள் நான்கு ஆரம்பிக்கப்பட்டவிதம்பற்றியும், இவற்றுக்கு வழங்கப்பட்ட கடனுதவி எந்தவழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றியும் விளக்கினார்.

இந்த 4 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட அன்றே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்தத் தினத்திலேயே இந்தச் சங்கங்களுக்கு 20 லட்சத்து 25 ஆயிரம் ரூபா உடனடியாக கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், இதுநடைமுறைக்கு மாறானது என்றும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படுவது வழமை என்றும், குறிப்பிட்ட 4 சங்கங்களைப் பொறுத்தமட்டில் கூட்டுறவு அமைப்பு விதிகள்மீறப்பட்டுள்ளதாகவும்விவசாய கூட்டுறவுப் பணிப்பாளர் தமது சாட்சியத்தில் கூறினார்.

1971-ம் ஆண்டில் இந்தச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட 20 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவில் 13 லட்சத்து 21 ஆயிரம் ரூபாமட்டுமே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடன் வழங்கப்படும்போது கடன் பெறுபவர்களிடமிருந்து பெறப்படவேண்டிய உறுதிப்பிணைகள் பெறப்படவில்லை என்றும், ஒழுங்கற்ற முறையில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு விதிகளை மீறும் வகையில் கூட்டுறவு அமைச்சர் ஆதித்தனார் தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம்செய்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (ஆ)

## மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தேர்தல்உடன்பாடு தோல்வி

### தி. மு. க. வும் ஜனதாவும் தலா 20 இடங்களில் போட்டி

சென்னை, பெப். 17

தி. மு. க. வுக்கும் ஜனதா கட்சிக்கும், மார்க்ஸிய கம்யூனிஸ் கட்சிக்குமிடையில் நடைபெற்றுவந்த தேர்தல் உடன்பாடு சம்பந்தமான பேச்சுவார்த்தைதோல்வியில்முடிந்துவிட்டது.

நாகபட்டினம் லோகசபைத் தேர்தல் தொகுதியை மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சிவிட்டுக்கொடுப்பதற்கு தி. மு. க. மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது என்று அறிவிக்கப்பட்டது.

ஜனதாகட்சியுடன் தி. மு. க. செய்துகொண்ட உடன்பாட்டின் பிரகாரம் நாகபட்டினம் தொகுதி தி. மு. க. வுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

உண்மைப் பக்தி ஏற்படவேண்டுமென்ருல் தன்னலமின்றித் தொடர்ந்து பக்தி செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும். —சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு
THE EELANADU

# புற்றுநோய் சிகிச்சை

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைத்துத்தருவதாகச் சுகாதார அமைச்சர் திருமதி சிவகாமி ஒபயசேகரா உறுதியளித்திருக்கிருர்.

யாழ்ப்பாணத்தில்இருபது லட்சரூபாய் செலவில் புதிதாக நிறுவப்பட்ட யாழ். பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைநிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே சுகாதார அமைச்சர் புற்றுநோய் சிகிச்சைநிலையம்அமைத்துத் தருவதாக உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வரும் அமைச்சர்கள் உறுதியளித்துச்செல்வதுஒன்றும்புதுமையல்ல.

இங்கு வந்து பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புக்களைக் கண்டு வாக்குறுதி அளித்துச் செல்வதும் ஒரு சம்பிரதாயமாகிவிட்டதென்று கூடச் சொல்லலாம்.

வாக்குறுதியளித்துச் செல்வதும் பின்னர் கொழும்பு திரும்பியதும் அதை மறந்துவிடுவதும் யாழ்ப்பாணத்துக்குப் பழகிப்போனசங்கதி.

இங்கு வாக்குறுதி கொடுத்துவிட்டுக்கொழும்பு திரும்பியதும் சங்கடத்தில் மாட்டிக்கொண்ட சம்பவங்களும் உண்டு. 1955ம் ஆண்டில் அப்போது பிரதமராக இருந்த சேர்.ஜோண் கொத்தலாவல இதற்கு உதாரணம்.

அமைச்சர் திருமதி சிவகாமி ஒபயசேகரா திறந்து வைத்த இந்த வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்துக்கு அத்திபாரமிட்டவர், முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு. பி. ஜி.ஆரியதாசா.

அத்திபாரக்கல் நாட்டும் வைபவத்தில் பேசிய அமைச்சர் ஆரியதாசா புற்றுநோய் சிகிச்சைக் கருவியான 'கோபோல்ட்' சாதனத்தை இங்குபொருத்தித்தருவதாக உறுதியளித்தார்.

இது 1974ம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சி.

இதற்கு முன்னரும் இந்த 'கோபோல்ட்' கருவி பற்றி விடுத்த கோரிக்கைகளுக்கு அமைச்சர்கள் நம்பிக்கையான பதில்களையே சொல்லி வந்திருக்கின்றனர்.

முன்னைய அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக இருந்த கண்டி எம்.பி. திரு. ஈ. எல். சேனநாயகாவும் இங்கு புற்றுநோய் சிகிச்சைக்கு வெளிநாடு ஒன்று தன்கொடையாகத் தருவதாகக் கூறிய ''கோபோல்ட்'' கருவியை யாழ்ப்பாணத்துக்குத் தருவதாக உறுதியளித்தார்.

இதுவரை அந்தக்கருவி யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை. ஆனுல் கண்டியில் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் புற்றுநோயால் பீடிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டுவருகிறது.

1969ம்ஆண்டில் 281பேர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டனர். 1972ம் ஆண்டில் 373 பேர் இந்நோயால்பீடிக்கப்பட்டனர். யாழ். ஆஸ்பத்திரியில் 1973ம் ஆண்டு வரை இயங்கிவந்த புற்றுநோய் சிகிச்சை நிலையத்தின் பதிவேடு இந்தப் புள்ளி விபரத்தைத் தெரிவிக்கிறது.

இந்தநிலையத்தில் கடமையாற்றிய ஒரு டாக்டர் இங்கிலாந்துக்குப் போனதும் இந்த நிலையம் மூடப்பட்டு விட்டது. 1972-ம் ஆண்டு டிசம்பர் வரை மகாரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்திலிருந்து ஒரு வைத்திய நிபுணர் மாதம் இரு முறை இங்குவந்து புற்றுநோயாளர்களைப் பார்வையிட்டு வந்தார்.

இதுவும் நிறுத்தப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மகாரகமைக்குச் சிகிச்சைக்குச்செல்வதிலுள்ள கஷ்டங்கள் பற்றிப் பலரும் பல தடவைகளிலும் எடுத்துக் காட்டியாயிற்று.

மகாரகமைக்குச்சிகிச்சைக்குச் செல்வதென்பது யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பாஷையில் சொன்னுல் ''சுடலை''க்குச் செல்வதற்கு ஒப்பாகும்.

சுகாதார அமைச்சர் திருமதி சிவகாமி ஒபயசேகரா, இங்கு புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ளார்.

கனடா அரசாங்கத்தின் உதவியுடன் இந்த நிலையத்தை இங்கு நிறுவித்தர உதவுவதாகவும், இங்குள்ள பொதுஸ்தாபனங்களும் ஆஸ்பத்திரி ஆலோசனைச் சபையும் இதற்கு உதவியும் ஒத்துழைப்புமளிக்கவேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்திருக்கிருர்.

உதவியும் ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்குமென்று உறுதியாக நம்பலாம்.

# புத்தளத்தில் இளைஞர் பேரவை அமைப்பு!

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழ் இளைஞர் பேரவையினர், இளைஞர் அமைப்புக்களை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

புத்தளத்தில் இம்மாதம் 20-ம் திகதி இளைஞர் பேரவை அமைப்பை உருவாக்குவார்கள்.

வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், சேனுதிராசா, ரகுபதிபால சிறீதரன் ஆகியோர் புத்தளம் செல்ல விருக்கிருர்கள்.

புத்தளத்தில் இம்மாதம் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் சிறைமீண்ட இளைஞர்கள் உரை நிகழ்த்துவார்கள். இக்கூட்டத்தில் திருவாளர்கள் வி. தர்மலிங்கம், எம். சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இம்மாதம் 27-ம் திகதி நீர்கொழும்பில் நடக்கவிருக்கும், இளைஞர் பேரவை கூட்டத்தில் சிறை மீண்ட இளைஞர்கள் உரைநிகழ்த்துவார்கள். 28-ம் திகதி சட்டக் கல்லூரியில் வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் உரை நிகழ்த்துவார்கள்.

மார்ச் மாதம், வடக்கு கிழக்கு மாகாணங்களில், கிராம ரீதியாக, இளைஞர் பேரவை கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல்களை, இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. ரகுபதி பால சிறீதரன் தெரிவித்தார். (க)

# தம்பரின் ஆத்மீக வாழ்க்கை

**[கல்விமான், கூட்டுறவாளன், தொழிற் சங்கவாதி, அரசியல் ஆலோசகர் என்று பல பெயர்களைப் பெற்று பலருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்த திரு. ஏ. ஈ. தம்பரின் நினைவு தினம் இன்ருகும்.]**

தம்பர் அவர்களைக் கல்விமான் என்றும் அரசியல்வாதியென்றும் பலர் அறிவர். ஆனுல் ஆத்மீக வாழ்க்கையில் அதிக நாட்டமுடையவர் என்பதை மிகச் சிலரேயறிவர். அவர் ஆத்மீகத்துறையில் அதிகம் எழுதியதோ பேசியதோ கிடையாது. ஆத்மீகத்துறையில் அவர் எழுதிய முக்கிய கட்டுரைகள் இரண்டு ''கண்ணப்பன்'' என்னும் புனைபெயரில் ஈழநாட்டில் வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகள் யோக சுவாமிகளையும், கலைப்புலவர் நவரத்தினம் அவர்களைப்பற்றியும் எழுதப்பட்டவையாகும். மேற்குறிப்பிட்ட இரு பெரியார்களைப்பற்றித் தம்பர் மேலும் ஒரு நீண்ட கட்டுரை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இக்கட்டுரை இன்னும் வெளிவரவில்லை. இக்கட்டுரையிலிருந்து சில பகுதிகளை இங்கு தந்து, அவற்றின்மூலம் தம்பரின் ஆத்மீக வாழ்க்கையை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யோகசுவாமிகளைத் தம்பர் முதன் முதலாக 1922-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சந்தித்ததாக எழுதியுள்ளார். யோகசுவாமிகளை அக்காலத்து மாணவர்கள் சாத்திரம் சொல்லுபவர் எனக் கேள்விப்பட்டிருந்தனர். தம்பரும் அவருடைய மூன்று சிநேகிதர்களும், (இவர்களில் இருவர் கிறிஸ்தவர். ஒருவர் மகமதியர்) கேம்பிறிச் சீனியர் சோதனைக்கு அவ்வாண்டு டிசம்பரில் தோற்றியிருந்தனர். அதன் பெறுபேற்றை அறிதற்கே சுவாமிகளிடம் சென்றனர். அம்முதல் சந்திப்பைப்பற்றித் தம்பர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''நாங்கள் கொழும்புத்துறை வீதியும் சுவாமியார் வீதியும் சந்திக்குமிடத்தை அடைந்த சமயம் மையற்பொழுதாய் விட்டது. தெருவில் நாட்டப்பட்ட மண்ணெண்ணெய் விளக்கின் நீழலில் தெய்வீக சக்தி வாய்ந்த ஒருவர் வீற்றிருக்கக் கண்டோம். அவர் ஒரு வெள்ளை வேட்டியை உடுத்திக் கொண்டு பத்மாசனம்போட்டிருந்தார். அவருடைய வழுவழுப்பான மேனியும், வெண்தாடியும், தரை முடியும், சிங்க நோக்கும் பண்டை ரிஷிகள் போன்ற மகாபுருஷர் என்பதைக் காட்டின. தியான நிலையிலிருந்தவர் கண்களைத் திறந்தார். இரவில் புலிகளின் கண்கள் சுவாலிப்பதுபோல் அவருடைய கண்கள் பிரகாசித்தன. பின்னர் கடல்மடை திறந்தாற்போல், பல தோத்திரப் பாடல்களைப் பாடிஞர். இரண்டு மணிநேரம் புயல் வீசியதுபோல் காணப்பட்டது. இப்பாடல்கள் அவர் உந்தியிலிருந்து பொங்கியெழுந்தன போன்று காணப்பட்டன. அவர் பாடி முடிந்ததும் ஒரு புயலடித்து ஓய்ந்த மாதிரி ஒரு பெரும் அமைதி நிலவியது. நாங்கள் மெய்மறந்து நின்ருேம். அப்பொழுது எங்களைப் பார்த்து ஒரு பெரும் சிரிப்புச் சிரித்துவிட்டு, எங்களை யாரென்றும், வந்த காரணம் யாதென்றும் விஞவிஞர். நாங்கள் அச்சத்துடன் சென்ற காரணத்தைக் கூறிஞேம். அப்பொழுது தாம் நினைத்த காரியங் கூறும் சோதிடனல்லனென்றும், மக்கள் வரும் பொழுது தமக்கு மனதில் தோன்றுவனவற்றைக் கூறுவதாகவும் சொன்ஞர். மேலும் ''நீங்கள் நால்வரும் நல்ல பிள்ளைகள். ஆனபடியால் நீங்கள் சோதனையில் சித்தியெய்த வேண்டும்'' எனக் கூறிஞர். நேரமாகிவிட்டபடியால், அப்பொழுது இரவு 9 மணியிருக்கும். எங்களை வீடு போகும்படி சொன்ஞர்.

தம்பரும் நண்பரும் வீடு திரும்பும்பொழுது தமது புது அனுபவத்தில் ஈடுபட்டவர்களாய்ப் பெரும்பாலும் மௌனமாகவே சென்றனர். அடுத்த நாள் தாங்கள் படித்து வரும் மத்திய கல்லூரியில் சந்தித்தபொழுது சுவாமிகளைச் சந்தித்தது பற்றியே பேசினர் இதைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகலில் சுவாமிகளைச் சந்திக்கப்போவதெனத் தீர்மானித்தனர். மூன்ருவது முறையாகத் தம்பர் சென்றபொழுது சுவாமிகள் கொழும்புத்துறைச் சந்தியில் உள்ள இருப்பைமர வேரில் இருக்கக் கண்டார். வழக்கம் போல் சிலர் சுவாமியைச் சுற்றி நின்றனர். சுவாமிகள் தாம் கையில் வைத்திருந்த சுவாமி விவேகானந்தரின் நூலொன்றைத் தம்பரிடம கொடுத்து அதை வாசிக்கும்படி கூறினர் தம்பர் ஒரு பக்கம் வாசித்து முடித்ததும் வாசிப்பதை நிறுத்தச் சொன்ஞர். பின்னர் தம்பரிடம் புத்தகங்கள் வாசிக்க விரும்பினுல் அவர்களுடைய கல்லூரியில் படிப்பிக்கும் திரு. நவரத்தினத்திடம் பெற்றுப் படிக்கலாமென்று கூறிஞர். தாம் கூறினதாகச் சொன்னுல் திரு. நவரத்தினம் புத்தகங்களைத் தடையின்றிக் கொடுப்பாரென்றும் சொல்லிவிட்டனர்.

**ச. அம்பிகைபாகன்**

தம்பர் திரு. நவரத்தினத்தைக் கல்லூரியிற் சந்தித்துச் சுவாமிகள் கூறியவற்றை அவருக்குக் கூறினர். அதற்குத் திரு.நவரத்தினம் சாயங்காலம் தாம் வீட்டுக்குப் போகும் பொழுது தம்முடன் வரும்படி கூறிஞர். தம்பர் திரு. நவரத்தினம் வீடு சென்றது பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''நாமிருவரும் மணிக்கூட்டு வீதி வழியாகச் சென்று கிழக்குப் பக்கமாகத் திரும்பி ஒரு ஒழுங்கைக்குள் (இப்பொழுது இது கலைப்புலவர் லீதியென அழைக்கப்படுகின்றது) சென்ருேம். சிறிது தூரம் சென்றதும் தெற்குப் பக்கத்திலுள்ள தமது சிறு வீட்டுக்குள் அழைத்துச் சென்ருர். அவ்வீட்டில் ஒரு சுவரில் பென்சிலால் வரையப்பட்ட காந்தியடிகளின் படத்தை—தலைப்பாகை, சேட், பஞ்சகச்சமாய்க் கட்டப்பட்ட வேட்டி முதலியவற்றுடன் காணப்படும் படத்தைக் கண்டேன். கண்டதும் திரு. நவரத்தினம் ஒரு வர்த்தகத்துறை ஆசிரியர் மாத்திரமின்றி ஒரு ஓவியரென்பதையும் உணர்ந்தேன். பின்னர் இவர் சில பக்திப் பாடல்களையும் இயற்றியுள்ளாரென்பதையும் அறிந்தேன். எதிர்ப்பக்கத்திலுள்ள சுவரில் விவேகானந்தரின் பெரிய படத்தைக் கண்டேன். இப்பிரபல சன்னியாசியே இந்திய நாட்டு மறுமலர்ச்சிக்கும், தேசிய எழுச்சிக்கும் வித்திட்டவர். இன்னும் வேறு இந்தியத் தலைவர்களின்படங்களையும் கண்டேன் பின்னர் அவர் படுக்கையறையாகவும், வந்தோர் இருக்கும் அறையாகவும் உபயோகிக்கப்படும் அறைக்குள் என்னை இட்டுச் சென்ருர். அங்கு முக்கிய பொருளாகத் தோன்றியது புத்தகங்கள் நிறைந்த ஒரு பெரும் அலுமாரியாகும். இந்த அறையில் என்னை விட்டுவிட்டு கால்முகம் கழுவி வருவதாக வெளியே சென்ருர். இதற்கிடையில் அன்பே வடிவான அவர் தாயார் இரு பித்தளை மூக்குப்பேணிகளில் இருவருக்கும் தேநீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு என்னை யார் என்று மகனிடம் கேட்டார். அதற்கு ஆசிரியர் தம்பருடைய மகனென்று என்னை அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் அதே அலுமாரியைத் திறந்து அங்குள்ள புத்தகங்களைப் பார்க்கும்படி கூறிஞர். புத்தகங்கள் அனேகமாக இந்திய தத்துவ சாத்திரம், இந்து சமயம், இந்தியக் கலாசாரம் சம்பந்தப்பட்டவையாகக் காணப்பட்டன. எனக்கு ஒரு நூலை எடுத்துத்தரும்படி அவரிடம் கேட்க, அவர் எட்வேட் காப்பென்ரர் எழுதிய 'எனது வாழ்க்கையும் இலட்சியங்களும்' என்னும் நூலைக் கொடுத்தார். பின்னர் நாமிருவரும் யோகசுவாமிகள், விவேகானந்தர் முதலியோரைப் பற்றிச் சம்பாஷித்தோம். இறுதியில் மணிக்கூட்டுக் கோபுரம் வரையும் என்னுடன் வந்து வழியனுப்பிவிட்டுத் திரும்பிச் சென்ருர்.''

யோக சுவாமிகளையும் திரு. நவரத்தினத்தையும் சந்தித்த பின்பு தம்பர் வாழ்க்கையில் ஒரு பெரும் திருப்பமேற்பட்டது. அதுகாறும் அவர் கண்டும் கேட்டுமிராத இலட்சியங்கள் அவர் மனதைக் கவர்ந்தன. இதனுல் இந்திய தத்துவ சாத்திரத்தையும்,இராமகிருஷ்ணர், விவேகானந்தர் சரித்திரங்களையும் உபதேசங்களையும், தமிழில் திருவாசகம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்களையும் படிக்கத் தொடங்கிஞர். மேலும் கத்தோலிக்க அனுபூதிமான்களின் சரித்திரங்களையும் படித்தனர். இவற்ருல் சமயத்துறையில் அவருக்குச் சமரச மனப்பான்மை ஏற்பட்டது. அவருக்கு மிகப் பிடித்தமானதும் அவருடைய சமய நிலையை நன்கு விளக்கும் தாயுமானவர் பராபரக்கண்ணியொன்றைத் தந்து இக்கட்டுரையை முடிப்போம்.

'கங்குல பகலற்ற திருக்காட்
சியர்கள் கண்ட வழி
எங்கும் ஒரு வழியே எந்தாய்
பராபரமே'

# ''இளைஞர்களின் தியாகம் வீண்போகாது'' — ஆனந்தசங்கரி

கிளிநொச்சி, வியா 'எதுவித விசாரணையுமின்றி தமிழ் இளைஞர்களை அரசாங்கம் சிறையில் அடைத்து வைத்து இன்று விடுதலை செய்திருக்கிறது. ஆனுல் இவ்இளைஞர்களின் தியாகம் வீண் போகாது' இவ்வாறு நேற்று யாழ். நோக்கி புகையிரதத்தில் வந்த சிறைமீண்ட தமிழ் இளைஞர்களை கிளிநொச்சிப் புகையிரத நிலையத்தில் வரவேற்றுப் பேசிய திரு. வீ. ஆனந்தசங்கரி கூறிஞர்.

அவர் மேலும் பேசுகையில் இளைஞர்களை ஒரு கிராமக் கோட்டிலும் சரி, அன்றி இணக்கசபையிலோ விசாரிக்க தகுந்த ஆதாரங்கள் இல்லாத அரசாங்கம் இவ்வளவு காலமும் இவர்களை அடைத்து வைத்துவிட்டு விடுதலை செய்துள்ளது என்ருர்.

இன்று பெரும் தலைவர் ஒருவரை இழந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் தமிழ் மக்கள் இவ்இளைஞர்களை குதூகலமாக மாலைமரியாதையுடன் வரவேற்க முடியாத நிலையில் உள்ளனர் என்றும் திரு. ஆனந்தசங்கரி கூறிஞர்.

# 'இளைஞர்சிறை செல்வதால் இலட்சியம் நிறைவேருது'

## கிளிநொச்சியில் வண்ணை ஆனந்தன்

கிளிநொச்சி, வியா

''ஒரு சில இளைஞர்கள்சிறை செல்வதினல் இலட்சியங்கள் நிறைவேறிவிடாது, தமிழ் ஈழமும் அமைந்துவிடாது. எங்கள் இயக்கத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அணி திரண்டு சாத்வீகப் போராட்டம் மூலமாக தமிழ்ஈழம் அமைத்திட முன்வரவேண்டும்'' இவ்வாறுசிறையிலிருந்து மீண்டு யாழ்ப்பாணம் வந்த வண்ணை ஆனந்தன்கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் திரு. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் கூறினர்.

அடுத்து மாவை சேனுதிராசா பேசுகையில் ''ஒரு கண்ணியமான தலைமையின் கீழ், இளைஞர்கள்ஒன்றுபட்டு தமிழ் ஈழத்தை அமைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை'' என்ருர்.

திரு. பொ. சத்தியசீலன் பேசுகையில், ''நாம் இன்று சிறையிலிருந்து வெளிவந்துள்ளோம். எங்களை நீங்கள்பார்க்கின்றபோது உங்களுக்கு மகிழ்வு ஏற்படுகின்றது. உங்கள் மகிழ்வும் உணர்ச்சியும் சிறைப்பட்டிருக்கும் தமிழ் ஈழத்தை மீட்டுத் தாருங்கள் என்றநிலைக்கும் எங்களை தமிழ் ஈழம் மீட்கும், தியாக உணர்வுக்கும் மகிழ்வாகத்தள்ளுகின்றது'' என்ருர்.

### ரயில் நிலையத்தில் கண்டகாட்சி

பெருந்தொகையான தமிழ் இளைஞர் பேரவை இளைஞர்களும், யுவதிகளும், திரு. ஆனந்தசங்கரி தலைமையில் கிளிநொச்சி புகையிரதநிலையத்தில் ஒன்றுகூடி இவர்களை வரவேற்றனர். கண்ணீர் மல்கியபடி திரு. ஆனந்தசங்கரி மாவை சேனுதிராசா, வண்ணை ஆனந்தன், சத்தியசீலன் ஆகியோரை கட்டித்தழுவி முத்தமிட்டார். மற்றும் வயோதிப மாதர் இருவர் தடதடத்தநிலையில் இளைஞர்களைக் கட்டியணைத்து முத்தமிட்ட காட்சி எல்லோர் நெஞ்சங்களையும் நெக்குருக வைத்தது.

### நிதிதிரட்டினர்

தமிழர் கூட்டணி உறுப்பினர்களான திரு. சி. ஏகாம்பரம், திரு. இ. கிருஷ்ணராசா ஆகியோராலும் இளைஞர்களாலும் சிறிது நேரத்தில் அங்கு கூடியமக்களிடம் சேர்த்த பணத்தொகையை திரு. ஆனந்தசங்கரி இளைஞர்கள் சார்பில் மாவை சேனுதிராசாவிடம் கையளித்தார்.

சிறிதுநேரத்தில் அவ்விடத்தில் கூடிய மக்களிடமிருந்து சுமார் 106 ரூபாய் கூட்டணி உதயசூரியன் கொடியில் வைத்து பணமுடிப்பாக வழங்கப்பட்டது. மக்களின் கரகோசத்திற்கு மத்தியில் இப்பண முடிப்பு வழங்கப்பட்டது.

......

## சுயாட்சிக் கழகம் கூடுகிறது

வண்ணர்பண்ணை, வெள்ளி

தமிழர் சுயாட்சிக் கழகம் அடுத்தவாரம் கூடி எதிர்வரும் பொதுத் தேர்தல் சம்பந்தமாக ஆராயவிருக்கிறது. பொதுத் தேர்தலில் சுயாட்சிக் கழகம் ஏன் போட்டியிடுகிறது என்பது பற்றி விளக்குமுகமாகக் கழகம் இக்கூட்டத்தில் அறிக்கை தயாரிக்குமென்றும் சகல தொகுதிகளிலுமிருந்து வந்துள்ள அபேட்சகர்களின் மனுக்களும் பரிசீலிக்கப்படுமென்றும் கழகத் துணைச் செயலாளர் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தன் தெரிவித்தார். (அ)

......

## உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு புனித யூதேயார் ஆலய உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

வண. றெஜி ராஜேஸ்வரன் திருப்பலிப் பூசையை நடத்தி வைப்பார். (உ)

# ஜி.ஜி. மறைவு: கிழக்கில்

## எங்கும் துக்கம் அனுஷ்டித்தனர்

மட்டக்களப்பு, வியாழன்

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கடந்த சனிக்கிழமை மட்டுநகர், ஏருவூர், செங்கலடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, கல்முனை முதலான இடங்களில் கடையடைப்புச் செய்யப்பட்டிருந்தது. இப்பகுதிகளில் அமரர் ஜி. ஜி. க்கு அஞ்சலி செலுத்துமுகமாக கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. மேற்படி அனுதாப நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் மட்டக்களப்பு 2-வது எம். பி யும், மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. இராஜன் செல்வநாயகமும் வேண்டுகோள் விடுத்திருந்தனர். (அ)

## மார்க்ஸிஸ

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கரூர்தொகுதி மார்க்ஸிய கம்யூனிஸ்டுகளுக்கெனவிடப்பட்டிருந்தது. ஆனல் தற்போது நாகபட்டினம் தொகுதியை மார்க்ஸிய கம்யூனிஸ்டுகள் கேட்டார்கள். இதனை விட்டுக்கொடுக்க தி. மு. க. சம்மதிக்கவில்லை. இதனல் இவர்களுடனன தேர்தல் உடன்பாட்டு முயற்சி முறிந்துவிட்டதாக திரு. கருணுநிதி இன்று அறிவித்தார்.

தி. மு. க. வும் ஜனதாகட்சியும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் உள்ள நாற்பது தொகுதிகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் தி. மு. க. 20 இடங்களிலும் ஜனதாகட்சி 20இடங்களிலும் போட்டியிடும். (ஆ)

## நெடுந்தீவில் தையல் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு மேற்கு கிராம சேவகர் பிரிவில் பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை நாளை சனிக்கிழமை ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் திறந்துவைக்கவிருக்கிருர்.

இந்நிலையம் நிறுவப்பட வேண்டியதன் அவசியம் குறித்து நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் வற்புறுத்திவந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

......

## சிறைக் கைதிகளுக்கு கண்ணுடிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை கண்தான சங்கத்தின் பொதுஜனத் தொடர்பு அதிகாரியான திரு. எல். ஜி. ஆர். பெரேரா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்த பௌத்த மதகுரு ஒருவரின் உறவினர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூக்குக் கண்ணுடிகளை அன்பளிப்புச் செய்வதற்காக இங்கு வந்த இவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்று, சிறைச்சாலை சுப்பிரின்டன் திரு. க. தங்கராசாவிடம் 16 கண்ணுடிகளைக்கையளித்தார்.

கண்பார்வை குறைந்த சிறைக்கைதிகளுக்கு இவை அன்பளிப்புச் செய்யப்படும். (ஆ)

நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில்

# இரு காங்கிரஸ்களும் போட்டியிடும்

கொழும்பு, வியாழன்

இருபெரும் தோட்டத் தொழிற் சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்று அங்கத்தவர் கொண்ட தொகுதியான நுவரெலியா — மஸ்கெலியாவில் போட்டியிட விருக்கின்றன. மேற்படி தொகுதியில் இந்திய வம்சாவளியினரின் பிரதிநிதியாக இந்திய வம்சாவளி ஒருவர் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷன் நிர்ணயித்துள்ளது குறிப்பிடத்தக்கது

முன்னைய ஆட்சி மன்ற முறையில் இந்திய வம்சாவளியினர் நியமன எம். பி. ஒருவரது நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் நிலை இருந்தது.

### வி. பி. கணேசன் விருப்பம்

தொழிற்சங்கப் பிரமுகரான திரு. வி. பி. கணேசன் தாம் தீவிர ஈடுபாடு கொண்ட ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளராக இத்தொகுதியில் போட்டியிட ஜ. தொ. காங்கிரஸின் தலைமைப்பீடத்தைக் கோரியுள்ளார் என நம்பகரமாகத் தெரிகிறது.

### அஸீஸின் நிலை என்ன?

ஆயினும் தற்போதைய நியமன எம்.பி.யான ஜ. தொ. காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜனுப் அப்துல் அஸீஸின் நிலை தேர்தலில் என்னவென்பது இன்னும் தெளிவாகவில்லை.

### இ. தொ. கா. தொண்டமான் போட்டி

மேற்படி தொகுதியில் இ. தொ. காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் திரு. எஸ். தொண்டமான் போட்டியிடுவார்.

தற்போதைய நுவரெலியா எம். பி. யான திரு. காமினி திஸநாயகாவும், மஸ்கெலியா எம். பி. யான திரு. காமினி ஆரியதிலகாவும்இத்தேர்தலில் போட்டியிடுவது திண்ணம் எனக் கூறப்படுகிறது. (உ)

# சென்னைதி.மு.க. கூட்டத்தில் ஜி. ஜி. க்கு புகழாஞ்சலி

சென்னை, பெப். 17

சென்னையில் நடைபெற்ற திரு. மு. க. செயல்வீரர்கள் கூட்டமொன்றில் இலங்கையின் முதுபெரும் சட்டமேதை அமரர் ஜி. ஜி.பொன்னம்பலத்தின் மறைவுக்கு ஒருநிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவு சம்பந்தமான தகவலைத் தெரிவித்த திரு. மு.கருணுநிதி, தி. மு. கவுக்கு எதிராக மத்தியஅரசு கொடுத்த வழக்குகளில் ஒருசதமேனும் வாங்காமல் கழகச்சார்பில் வாதாட திரு. ஜி. ஜி. முன்வந்திருந்தார் என்று கூறி, அவரது ஆத்ம சாந்திக்காக மௌனம் கடைப்பிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். உடனேசபையோர் எழுந்துநின்று மௌனம் அனுஷ்டித்தனர்.

திரு. கருணுநிதி இங்கு பேசுகையில் ''தமிழ்ச்சமுதாயம் எங்கே அலைக்கழிக்கப்படினும் அந்தச் சமுதாயத்திற்காக நான் ஒருகாசுகூட வாங்காமல் வாதாடத் தயாராக இருக்கிறேன் என்று திரு. ஜி.ஜி.அதை கூவல் விடுத்து தமிழகம் வந்து வழக்கிலே கலந்துகொண்டுவிட்டு வழக்கு விசாரணைக்கு வரும் நேரத்திலே மீண்டும் வருகிறேன் என்றுசொல்லி இலங்கைக்குச்சென்று திரும்பாமலே மறைந்துவிட்டார் என்றும், உலகத் தமிழ்த் தலைவர்களில் திரு. ஜி. ஜி. யும் குறிப்பிடத்தக்கவர் என்றும் புகழ்மாலை சூட்டினர். (ஆ)

# 'பிரச்னைகளை அரசுடன்பேசித் தீர்க்க முன்வருக'

## கூட்டணித் தலைவருக்கு அனுரா அழைப்பு

### அமரர்கள் நல்லையா, ஜி. ஜி.க்கு அஞ்சலி

மட்டக்களப்பு, வியாழன்

''நாட்டைத் துண்டாடும் எண்ணத்தைக் கைவிட்டுச் சமரசமாகத் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணித் தலைவரான திரு. அனுரா பண்டாரநாயக்கா மட்டக்களப்பில் நடைபெற்ற பகிரங்கப் பொதுக்கூட்டம் ஒன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

திரு. அனுரா பண்டாரநாயக்கா மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு மட்டக்களப்புக்கு வருகைதந்தபோது வரவேற்பளிக்கு முகமாக இக்கூட்டம் மட்டக்களப்புப் பாட்டாளிபுரம் மைதானத்திலுள்ள இராஜன் அரங்கில் நடைபெற்றது.

மட்டக்களப்பு 2வது எம். பி.யும், மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. இராஜன் செல்வநாயகம் இவ்வைபவத்திற்குத் தலைமைவகித்தார்.

கூட்ட ஆரம்பத்தில் திரு. அனுரா பண்டாரநாயக்காவின் விருப்பத்திற்கிணங்க காலஞ்சென்ற அமரர்கள் வி. நல்லையா, ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோரின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### தமிழர் உரிமையில் எமக்கு அக்கறையுண்டு

திரு. அனுரா பண்டாரநாயக்கா கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்நாட்டில் பெரும்பான்மையான இனத்தினர் சிங்கள மக்களே. ஆயினும் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கவனம் கொண்டுள்ளது. எங்கள் கட்சி தமிழர்களுக்கு விரோதமானதல்ல. தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் என்றும் ஆயத்தமாகவே உள்ளோம். நாங்கள் தமிழர்களுக்கு விரோதமானவர்களென்றல் திரு. இராஜன் செல்வநாயகத்தை அரசியல் அதிகாரியாக ஆக்கியிருக்கமாட்டோம். பொதுத் தேர்தல் நடைபெறுமா நடைபெறமாட்டாதா என்று சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. அது உரிய காலத்தில் நடைபெறும். ஆனல் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நினைத்திருப்பது போல் அத்தேர்தலில் அவரது கட்சி வெற்றிபெற முடியாது. மீண்டும் சுதந்திரக் கட்சியே மக்கள் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றும்.''

இக்கூட்டத்தில் செல்வி இந்திரா தாமோதரம் பிள்ளை, ஜனுப் மொஹிதீன் ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

......

## கொழும்பில் நீர்வெட்டு அமுல்!

கொழும்பு, வியா.

கொழும்பிலும் சுற்றியுள்ள சில நகரங்களிலும் இம்மாதம் 21-ந் திகதிமுதல் நீர்வெட்டு அமுலுக்கு வந்துள்ளது.

வருட நடுப்பகுதியில் ஏற்படக்கூடிய தண்ணீர்த் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகஅறிவிக்கப்படுகிறது.

தினமும் காலை 10மணிமுதல் 4 மணிவரை நீர்வெட்டு அமுலில் இருக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் நீர்வெட்டு அமுல் செய்யப்படமாட்டாது. (ஆ)

## கூட்டுறவுச்சங்க முகாமையாளருக்கு இன்சூரன்ஸ் பயிற்சி

கொழும்பு, வியா.

ப. நோ. கூ. சங்க முகாமையாளர்கள், கணக்காளர் ஆகியோருக்கு காப்புறுதி நடவடிக்கை சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

மக்கள் வங்கியும், காப்புறுதிக்கூட்டுத்தாபனமும் இதனை ஒழுங்குசெய்துள்ளன. முதலாவது பயிற்சி வகுப்பு கொழும்பில் ஆரம்பமானது. இந்தப் பயிற்சி நாடுபூராவும் விஸ்தரிக்கப்படும். (ஆ)

# 'தென்னிலங்கை அரசியல் நெருக்கடி பற்றி கவலையில்லை'

## சிறைமீண்ட இளைஞர் வரவேற்பில் திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இன்றைய அரசாங்கம் ஆட்சிமன்றக் கூட்டத் தொடரை நடத்துவதற்குத் தைரியமின்றி அதை ஒத்தி வைத்துள்ளது. இதனால் தென்னிலங்கையில் உருவாகக்கூடிய நெருக்கடி நிலைமை பற்றி எமக்கு எதுவித அக்கறையும் இல்லை. நாம் கட்டுப்பாடுகுலையாது தமிழ் ஈழக் கொள்கை நிறைவேற உழைப்போம்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் சிறைமீண்ட இளைஞர்களுக்குஅளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினார்.

### உறக்கமும் விழிப்பும் போன்றது

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:–

"இனத்தின் விடுதலைக்காக சிறைசென்று மீண்டுள்ள எம் அருமைத் தம்பியர்க்கு சிறைசெல்வதும் பின் விடுதலையாவதும் உறங்குவதும் பின் உறக்கம் கலைந்து விழித்தெழுவதும் போன்றதுபோலாகிவிட்டது.

எமது இனத்தின் விடிவுக்காகப் பாடுபட்ட இருபெரும் தலைவர்களான ஜி. ஜி. பொன்னம்பலத்தையும், திருச்செல்வத்தையும் இழந்து நாம் வேதனையுற்றிருக்கும் இவ்வேளை சிறையில் வாடிய எம் தம்பியர் விடுதலையாகியிருப்பது சிந்தையில் மகிழ்வைத் தருகிறது.

### தம்பியர் தவக்கோலம் பூண்டது ஏன்?

இந்தத் தம்பியர் சிறைவாசம் அனுபவித்து இன்று தவக்கோலத்தில் வந்திருப்பது தம் சொந்தநலனுக்காகஅல்ல. இனத்திற்காக சொல்லொணாத் துயர்களை அனுபவித்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

விடுதலையாகியுள்ள இத் தம்பியர் மீண்டும் சிறை செல்லமுன் நாம் சிறை செல்லும் நிலை உருவாகுதல்வேண்டும்.

நம்மை நாமே ஆளும் நிலை உருவாகும்வரை, தமிழ் ஈழம் மலரும் வரை அயராது உழைப்போம் என நாமனைவரும் உறுதிபூணுவோம்.

### வீர உணர்ச்சி பெருகட்டும்

தம் உள்ளம் வேதனையால் துடிக்கும் நேரம் உடல் நலனையும் கருதாது எம் அருமைத் தம்பியர் சிறையில் சாகும் வரை உறுதியுடன் உண்ணாவிரதம் இருந்தார்கள். தந்தை செல்வாவின் வேண்டுகோளை ஏற்று அவர்கள் பின்னர் தம் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். எம் இத்தம்பியரின் வீர உணர்ச்சியைப் பின்பற்றி நம் இளைஞர்கள் விடுதலைப் பாதையில் ஆயிரமாயிரமாகத் திரளவேண்டும்."

### மாவை சேனாதிராஜா

சிறைமீண்ட மாவை சேனாதிராஜா பேசுகையில் "தமிழ் ஈழம் ஒன்றே எம் கொள்கை. எந்த சக்தியும் எம் இலட்சியத்திற்குத் தடைபோட முடியாது" என்றார்.

எம் இலட்சியத்தை வெற்றிபெறச் செய்ய எந்தப் போராட்டத்திற்கும் நாம் தயாராகிவிட்ட வைராக்கியத்துடன் இருக்கிறோம்" என்றும் அவர் சொன்னார்.

எம்மை எந்த நல்லநோக்கத்துடனும் குறிப்பாக நீதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் அரசாங்கம் விடுதலை செய்யவில்லை. ஆட்சிநிலை சீர்குலைந்து அவசரகால சட்டத்தைத் தொடர்ந்தும் அமுல்படுத்த முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டதாலேதான் அரசாங்கம் எம்மை விடுதலை செய்தது என்று கூறிய சேனாதிராஜா மேலும் கூறியதாவது:–

### எம்மைச் சந்தித்த சிறையதிகாரி

நாம் விடுதலை செய்யப்படுவதற்கு சிலதினங்களுக்கு முன்னர் சிறைச்சாலை ஆலோசனை சபை அதிகாரியான திரு. தஸநாயக்கா என்பவர் எம் அனுமதியின்றியே எம்மை சந்தித்தார். "விடுதலையாகிவெளியே போனதும் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று எம்மைக் கேட்டார். அவ்வேளை கவிஞர் காசிஆனந்தனும் எம்முடன் இருந்தார்.

"தமிழ் ஈழமே" எமது அசைக்கமுடியாத இலட்சியம் என்று நாம் அவரிடம் உறுதியாகக் கூறினோம்.

"வடபகுதியில் துப்பாக்கிச் சூடுகளும் கைக்குண்டு வீச்சுக்களும் இடம் பெறுகின்றனவே இவற்றை உங்களால் தடுத்து நிறுத்த முடியாதா?" என்று எம்மிடம் தொடர்ந்து கேட்டார் அவர்.

"எமது இயக்கம் சொல்வதை நாம் வேதவாக்காகக் கொள்வோம். யார், யாரோ செய்யும் அசம்பாவிதச் செயல்களுக்கு நாம் எப்படிப் பொறுப்பாளிகளாக முடியும்? என்று அவரிடமே நாம் வினவினோம்.

### தவிர்க்க முடியாததே

"விடுதலைபெறத் துடிக்கும் நாடுகளில் அசம்பாவிதங்கள் நிகழ்வது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது" என்றும் நாம் அவரிடம் சுட்டிக் காட்டினோம்.

"நாம் சிறையில் இருந்த வேளை பல நோய்களால் பாதிப்புற்றோம். உடல்நிலை தளர்ந்துள்ளஇவ்வேளையிலும் எமது உள்ள உறுதி அணுவளவும் குறைந்திடவில்லை.

உங்கள் உற்சாகமான வரவேற்பு எம் சிந்தைக்கு நிறைவைத் தந்து எம் இலட்சியம் மிக விரைவில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையைத் தருகின்றது. இளைஞர்களின் உணர்ச்சி மேலீட்டை அடக்கிவிட அரசாங்கத்தால் முடியாது என்பது தெளிவாகிவிட்டது. ஒரே தலைமையில் உதயசூரியன் கொடியின் கீழ் நாம் போராடுவோம். வெற்றிவாகை சூடுவோம்."

### தேர்தல் காலத்தை வீணடிக்கும்

சேனாதிராஜா தொடர்ந்து பேசுகையில்– "தேர்தல் நெருங்குகிறது. எமது காலமும் வீணாகப்போகிறது. வீடு வீடாகச் சென்று விடுதலை வேட்கையை நாம் ஊட்டுவோம். எமது அமைப்பைப் பலப்படுத்துவோம்.

### சத்தியசீலன் உறுதி

நான்கு வருடங்களுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்துவிட்டு விடுதலையாகியுள்ள திரு. சத்தியசீலன் சுருக்கமாகப் பேசுகையில், "சிறைவாசத்தால் எமக்கு ஏற்பட்ட இடர்கள், இழப்புகள் என்பன வற்றையெல்லாம் நாம் உங்கள் முன்னிலையில் எடுத்துரைத்து அனுதாபம் பெற வரவில்லையென்றும் எந்த இலட்சியத்துக்காக நாம் சிறை சென்றோம் என்ற உண்மையை உணர்ந்து நம் வீர இளைஞர்கள் செயற்பட்டால் அதுவே எமக்கு ஆத்ம திருப்தியைத்தருமென்றும்" கூறினார்.

### வண்ணை ஆனந்தன்

வண்ணை ஆனந்தன் பேசுகையில், "எந்தச் சக்தியும் எமது இலட்சியப் பாதையில் குறுக்கிட முடியாது. எவரோ ஒருவர் அவலமான விதத்தில் மரணத்தைத் தழுவிக்கொண்டதால் என்னை ஆட்சிபீடம் உருத்திரபுரத்தில் கைதுசெய்து விமான மூலம் கொழும்புக்குக் கொண்டு சென்றது. நாடாளும் பிரதமர், அவர் மகன் மட்டுமல்ல, இந்த வண்ணை ஆனந்தன் கூட விமானத்தில் செல்லலாம் என்பதை அன்று புரிந்துகொண்டேன்" என்றார்.

"அண்ணன் அமிர்தலிங்கம் தலைமையில் விடுதலைக்காகப் போராடுவோம். நம்மை நாமே ஆள்வோம், அடிமை விலங்கைத் தகர்த்தெறிவோம், விடுதலை உணர்ச்சி நம் ஒவ்வொருவரினது உள்ளத்திலும் நிலைபெறட்டும்" என்று திரு. வண்ணை ஆனந்தன் தமது பேச்சை முடித்தார். (உ)

---

## "இலங்கையின் முதல் ஆயுர்வேதக் கல்லூரியின் நிலை!"

வண்ணார்பண்ணை, வியாழன்

"1925-ம் ஆண்டு முதல் இயங்கிவரும் யாழ்ப்பாண லங்கா ஆயுர்வேதக் கல்லூரி ஆரம்பகாலத்து நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறதென்றால், இன்றைய ஆட்சியில் இது ஓர் அபூர்வமான விஷயமாகவே இருக்கிறது. இலங்கையில் இதுவே முதன் முதல் உருவான ஆயுள்வேதக் கல்லூரியாகும். இக் கல்லூரியின் மீது அரசு உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்."

இவ்வாறு நேற்று முன்தினம் சுகாதார அமைச்சருக்கு யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் கொடுக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் தெரிவித்தார்.

இக் கல்லூரி மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்தில் திரு. மார்ட்டின் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:–

அரச ஆயுர்வேதக் கல்லூரிகளில் வழங்கப்படும் பட்டமே இக்கல்லூரியிலும் கொடுக்கப்படுகிறது. அதேதரத்தில் ஒரே பாடத்திட்டம் தான் இங்குமிருக்கிறது. இதற்கான சோதனைகளும் ஒரேமாதிரித் தான் நடக்கிறது.

இப்படியெல்லாம் இருந்தும், இக்கல்லூரி மாணவர்களது படிப்பு புறக்கணிக்கப்படுகிறது. கல்லூரி அங்கீகாரம் இல்லாதிருக்கிறது. ஏன் இந்த நிலை என்பதை அமைச்சர் ஆராயவேண்டும்.

இக்கல்லூரிமுன்னரொருமுறை அங்கீகரிக்கப்பட்டும். அந்த அங்கீகாரம் பின் நிறுத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதில் என்னசதிநடந்தது என்பதை எமது அரசு ஆராய வேண்டும்.

கைதடியில்கட்டப்பட்டுள்ள கட்டிடம் வீணாகக்கிடக்கிறது. இக் கல்லூரியை அங்கீகரித்து அதனுடன் இணைத்தால் வட இலங்கை மக்கள் பயனடைவதுடன் சித்த ஆயுர்வேதத்திற்கு அரசு வடக்கிலும் புத்துயிர் கொடுப்பதாக அமையும்".

யாழ். மாவட்ட அரசியல் அதிகாரியும் நல்லூர் எம். பி. யுமான திரு. சி. அருளம்பலம் பேசுகையில் "ஆயுர்வேதத்துறையில் நின்றுசேவை புரிய முன்வரும் தமிழ் மாணவர்களது நலன் கருதியும் ஆயுர்வேத வளர்ச்சி கருதியும் இக்கல்லூரி விடயத்தில் அமைச்சர் உடனடிக் கவனத்தை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எஸ். விஜயபால பேசுகையில், அமைச்சரின் நேரடிவிஜயம் இதுவரை இக்கல்லூரிக்கு இருந்துவரும் குறைகளை நீக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

......

## இடபராசியில் குருபகவான் இன்று பிரவேசிக்கிறார்

### உங்கள் பலன் என்ன?

**— சோதிடர் ஐயா. சச்சிதானந்தம் —**

இன்று 18-2-77 வெள்ளிக்கிழமை மாலை 5-55க்கு இடபராசியில் குருபகவான் பிரவேசிக்கின்றார். இப்பெயர்ச்சியினால் ஏற்படும் பலா பலன்கள் கீழேதரப்படுகின்றன.

### மேட இராசியில் பிறந்தவர்களுக்கு

வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பும், பணவரவுகளும், வாக்கு கௌரவங்களும் குடும்பத்தில் நிம்மதியும், தீராத நோய்கள் தீருதலும் வழக்குகளில் வெற்றியுமுண்டு, திசாபுத்தி பலவீனப்பட்டவர்களுக்கு சிறிது அலைச்சல் மூலம் பலன்கிட்டலாம்.

### இடபம்

மனதில் நிம்மதிக்குறைவும், புத்திரர், இனசனத்தவரால் விரோதமும், பணவகை தட்டுப்பாடுகளும் காணும். செய்தொழிலில் லாபம் காண முடியாது, உத்தியோகத்துறைகளில் அலைச்சலும், பகைமையும் உண்டாகும். மனைவி, நண்பர், வீண்சந்தேகம் மிகுந்து காணும்.

### மிதுனம்

தக்க சமயத்தில் பணவரவுகள் கண்டு செலவு அதிகரிக்கும், சில தொழில் முயற்சிகளில் லாபமுண்டாகும், சொத்துக்கள் சேர்வதற்கு வாய்ப்புண்டு, நீண்ட பிரயாணங்கள்மூலம் அலைச்சல்.

### கடகம்

தீர்வு காணாத பல விஷயங்கள் தீர்வுகாணும், வியாபாரங்களில் லாபமுண்டு, விவாகமாகாதவர்க்கு விவாகமும், பழைய பாக்கி வசூலாவதும், நண்பர், மனைவி விசுவாசங்களும் உண்டு, தொழில்துறையில் பதவி உயர்வுண்டு.

### சிங்கம்

தொழில்துறைகளில் ஏமாற்றமும் கஷ்டமும் அதிகரிக்கும், குடும்பத்தில் போதிய வருவாயும், நிம்மதிக்குறைவும் உண்டு, அரச தொழில்துறையினர் எதிலும் அவதானமாக நடப்பது நன்று.

### கன்னி

பணவகை தட்டுப்பாடுகள் நீங்குதலும், பொதுநல சேவையில் கௌரவங்களும், தொழில்துறைகளில் லாபமும், பதவி உயர்வும் உண்டு. கணவன்–மனைவி உறவுகள் மேலோங்கும், புத்திரரால் நன்மை உண்டு, சொத்துவகை பிரச்னைகள் தீர்வுகாணும்.

### துலாம்

உடல் நலம் குன்றுவதும, வழக்குகள் ஏற்படுதலும் காணும். தொழில் துறையில் கஷ்டம், இடமாற்றங்களுண்டு. இனசன வகையிலும், புத்திரர் வகையிலும் பகைமையுமுண்டு. கல்வியில் பங்கமுண்டு, நிம்மதிக்குறைவுண்டாம்.

### விருச்சிகம்

நீண்டகாலப் பிரச்சனைகளுக்குத் தீர்வும், தொழில் லாபமும், உயர்வுமுண்டு. சிலருக்குவீடு, நிலம், வாகன வசதிகள் சித்திக்கும். குடும்பத்தில்உறதில் நிம்மதியும்,குடும்ப வாழ்வும், இனசன வரவும்.

### தனு

கொடுக்கல் வாங்கல்களில் மனஸ்தாபமும், வீண்செலவுகளும் அலைச்சலும் உண்டு. நினைப்பது ஒன்று வேறொன்று பலனாக நடைபெறும். தொழில் துறைகளில் பகைமையும், அருவருப்புமுண்டு. எதிலும் நிம்மதியின்மையுண்டு.

### மகரம்

எதிர்பாராத தன லாபங்களும், குடும்ப அபிவிருத்தியுமுண்டு. தொழிலில்லாதவர்களுக்குத் தொழில் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும், இளைய சகோதரங்களால் நன்மையுமுண்டு. மேலும் வெற்றியுண்டு.

### கும்பம்

தாய், தந்தையரால் மனஸ்தாபங்களும், வரவுக்கு மீறிய செலவும், வாகனக் கஷ்டமும் உண்டு. வியாபாரம், விவசாயத்தில் கஷ்டம், இனசனப் பகையுண்டு, ரோகங்களுண்டு, வாக்குக் கௌரவம் பாதிக்கும்.

### மீனம்

சஞ்சலங்களும், சகோதர விரோதங்களும் உண்டாகும். தொழில் துறைகளில் நிர்ப்பந்தங்களும், அலைச்சலும் உண்டு. எதிலும் மௌனமையாய் இருந்து தன்கடமையைச் செவ்வனே சாற்றுவது சாலச் சிறந்தது. (அ)

......

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். முஹியதீன் முற்போக்கு இயக்கச் சனசமூக நிலைய நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்– முகம்மது தாஹிர், உப தலைவர்: மீ. முஸாதிக், செயலாளர்: த. அப்துல் ஸலாம், உப செயலாளர்: அ. ரகூப், தனாதிகாரி: முகம்மது கையூம், இணைப்பு நிர்வாகக் குழு உறுப்பினர் 6 பேர்.

0 0 0

பருத்தித்துறை, புதன்

கரவெட்டி சிந்தாமணி விநாயகர் சனசமூகநிலையப் புத்தாண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்: வி. நடேசு, உப தலைவர்: வே. ஆறுமுகம், செயலாளர்: இ. கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர்: சி. மார்க்கண்டு. 9பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (அ)

......

## புனரமைப்புக் கூட்டம்

கிளிநொச்சி, வியாழன்

தமிழர் விடுதலைக் கூட்டணி கிளிநொச்சி மாவட்டக்கிளையின் புனரமைப்புக் கூட்டம் திரு. வி. ஆனந்தசங்கரி தலைமையில் இம்மாதம் 20-ந் திகதி நடைபெறவிருக்கிறது. திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரும் இதில் கலந்துகொள்வர்.

......

## நியமனம்

சுழிபுரம், வியாழன்

காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் வர்த்தக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பொன்னாலையைச் சேர்ந்த திரு. வ. ஸ்ரீகாந்தன் என்பவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் (உ)

ராஜா கடைசி வாரம்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

வெலிங்டன் எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பணக்காரக் குடும்பம்

லிடோ ஏ. வி. எம். ராஜன் - லதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

மனோகரா 4-வது 'ஹவுஸ்புல்' வாரம்
காட்சி நேரங்கள் குறிப்பிட
[யாழ்ப்பாணம்] முடியாமைக்கு மன்னிக்கவும்.
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்



இதயக்கனி
[ஈஸ்மன் கலர்]

கொழும்பு, வியாழன் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் உள்ளூர் வங்கிகளில் சேமிக்கும் பணத்துக்கு வழங்கப்படுகின்ற வட்டிக் கொடுப்பனவுகளுக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவுள்ளது. அத்துடன் செல்வவரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

இலங்கை வங்கியிலும் மக்கள் வங்கியிலும் சேமிக்கப்படும் பணத்துக்கான வட்டி

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - வீரப்பா
மகாதேவி

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
எடுப்பார் கைப்பிள்ளை

புலோலி சினிமா
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
ஜெமினி - பத்மினி
மல்லிகா

# வெளிநாட்டுப் பணத்துக்கு வட்டி அதிகரிப்பு; வரியும் இல்லை

விகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சேமிப்பு பணத்துக்கு ஐந்தரைவீத வட்டியும், நிலையான வைப்புப்பணத்துக்கு 6 முதல் ஏழரைச் சத விகித வட்டியும் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

முதலீட்டு பணத்துக்கு நாலரைவீத வட்டி கிடைக்கும். (ஆ)

# இளம் பெண் கடத்தல்: நால்வரும் பிணையில் அனுமதி

நெல்லியடி, வீயா. கரவெட்டி மேற்கில் பட்டப் பகலில் திருமணப் பதிவுக்கு முதல் நாள் இளம்பெண்ணைக் கடத்தியதாகக் கூறப்படும் நால்வர் கோஷ்டியினர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட கரவெட்டிமேற்குவாசிகளான ரி. ஜெயவீரசிங்கம், மூர்த்தி, வீரசிங்கம், சின்னத்துரை (கார்ச்சாரதி) ஆகியோர் பருத்தித்துறை நீதவான் திரு. அ. கங்காதரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களைப் பிணையில்செல்ல நீதவான் அனுமதித்தார். (அ)

# கிளிநொச்சியில் நாளை வயல் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி கிளிநொச்சி விவசாயப் பண்ணையும் பாடசாலையும் இணைந்து நாளை சனிக்கிழமை வயல் விழாவும் பெற்றார் தின விழாவும் கொண்டாடுகின்றன. பரந்த அடிப்படையில் கொண்டாடப்படும் இவ்விழாவில் விவசாய தொழில்நுட்பப்பொருட்காட்சியும் கலைவிழாவும் இடம் பெறவுள்ளன. விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ள பொருட்காட்சியில் மேல்நாட்டு, கீழ்நாட்டுக் காய்கறிகள் வயல்வெளியில் தமது சீரிய உற்பத்தித் திறனை எடுத்துக்காட்டும் வகையில் மேற்படி பண்ணையும், பாடசாலையும் குறிப்பாக பயறு, உளுந்து, கொத்தமல்லி, இறுங்கு, சோளம் என்பவற்றைக் காட்சிக்கு வைக்கப்படவிருக்கின்றன.

விவசாயத் தொழில்நுட்பும் பற்றியும் இப்பொருட்காட்சியில் விபரிக்கப்படும். இவ் விழாவுக்கு பண்ணைமுகாமையாளர் திரு. இ. கந்தையாவும், பாடசாலைஅதிபர் திரு எச். ஏ. அருள்ஞானமும் தலைமை வகிப்பார்கள். (உ)

## கரப்பன்

(8-ம் பக்கம் பார்க்க)

இருந்ததாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து இம்மரணம் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, மேல் விசாரணைசெய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டதுடன் சடலத்தைப் புதைக்கும்படி உத்தரவிடப்பட்டது. (அ)

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு, சகல கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 9 அம்சத் திட்டம் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டதென்றும் கூறிய திரு. ஞானமூர்த்தி தமிழர் கூட்டணி 1971-ம் ஆண்டிலிருந்தே இயங்க ஆரம்பித்ததாகவும் தெரிவித்தார்.

தமிழர் கூட்டணியினால், அரசியல் நிர்ணயசபைக்கும் சில தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழர் கூட்டணி 1976-ம் ஆண்டே பூரணமாக 5 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டதால், தேர்தல் ஆணையாளர் நிச்சயம், கூட்டணியை ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிப்பார் என்றும் அவர் தெரிவித்தார். (க-அ)

## கம்யூனிஸ்ட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு ஆதரவளிப்பதென்றும் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

மத்தியகுழுவின் முடிவு அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

மத்தியகுழுவின் இந்த முடிவு வாரஇறுதியில் கொழும்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்படவிருக்கிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த K. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்



யாழ் ராணியில்
தினசரி 4 காட்சிகள்
∴ கமலஹாசன்
∴ புது முகம் தீபா
∴ சாவித்திரி
∴ சுந்தரராஜன்
∴ மனோரமா ∴ சோ
∴ குமாரி பத்மினி
∴ தேங்காய் சீனிவாசன்
∴ சுகுமாரி
∴ விஜயசந்திரிகா
மற்றும் பலர்
நடித்த
மாயா ஆர்ட்ஸ்
அளிக்கும்



அந்தரங்கம்

Regal Daily at 4-45, 7-00 & 9-30 P. M.
(Jaffna) LESLIE PHILLIPS-TERRY THOMAS in
SPANISH FLY (adults -color)
ஸ்பனிஷ் (f)பிளை (கலர்)
(sex-comedy - hit of the year)
வயதுவந்த அனைவரும் கண்டுகளித்து பரவசமடைய வேண்டிய ஹாஸ்யச் சித்திரம்.

RIO Daily: 10-30, 4-45, 7-15, 9-45.
(Jaffna) CHRISTOPHER LEE -
RICHARD WIDMARK
in
To The Devil a Daughter
(adults)

கடைசி வாரம்
ஸ்ரீதர் எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
அடுத்த வெளியீடு! 25-2-77 முதல்
சிவாஜி - ஜெயலலிதா
(இருவேடம்) நடித்த
பாட்டும் பரதமும்

ஈழநாடு
The EELANADU

# சகல உள்ளூராட்சிமன்ற ஆயுள்காலம் நீடிப்பு!

## 1978 ஜனவரியில்தான் தேர்தல்

கொழும்பு, வியா

சகல உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலமும்நீடிக்க பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் கே. வி. டி. அல்விஸ் உத்தியோக பூர்வமாக இன்று அறிவித்தார்.

வருகிறஆண்டு மார்ச்மாதம் 1ம் திகதிவரை இவற்றின்ஆட்சிக்காலம்நீடிக்கப்பட்டுள்ளது. விசேடஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட நாட்டிலுள்ள 675 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்புக் கூறுகிறது.

இவ்வருட டிசம்பர் இறுதிப் பகுதியில் அல்லது ஜனவரி, பெப்ரவரிமாதத்தில் இவற்றுக்கான தேர்தல்கள் நடாத்தப் படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## சஞ்சய்காந்திக்கும் அரசு நிர்வாகத்துக்கும் தொடர்பில்லை

### பிரதமர் இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, பெப். 17

'எனது மகன் சஞ்சய்காந்தி அரசை நடத்துகிறார் என்று சொல்லப்படுவதை நான் மறுக்கின்றேன், அரசு எடுத்த எந்தமுடிவுக்கும் சஞ்சய்காந்திக்கும் தொடர்பில்லை'

இவ்வாறு பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார். 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மந்திரி சபை அல்லது மந்திரிசபை உபகமிட்டி எடுக்கும் திர்மானத்தின் படியே அரசு இயங்குகிறது என்று பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

தேர்தல் பிரசாரத்துக்கு எதிர்க்கட்சியினருக்கு கொடுக்கப்பட்ட காலம் போதாது என்று கூறப்படும் குற்றச் சாட்டுப்பற்றி பத்திரிகை நிருபர் பிரதமர் இந்திராவிடம் கேட்டபோது ஆளும் காங்கிரசுக்கும் அதே காலம்தான் கொடுபட்டுள்ளது என்றார்.

எந்த அரசு அமைக்கப்பட்டாலும் சகலகட்சிகளும்ஒன்றுபட்டு நாட்டுப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டது முதல் தீயசக்திகளின் அபாயம் அதிகரித்து வருகிறது என்றும் பிரதமர் 'லண்டன் டைம்ஸ்'க்கு அளித்தபேட்டியில் சொன்னார். (ஆ)

### வேலைத்தலம் விஸ்தரிக்கப்படும்

நெல்லியடி, வியா.

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ பொறியியல் வேலைத் தலம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகப்போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வேலைத்தலத்தில்இடநெருக்கடி காரணமாகத் தொழிலாளர்களுக்குச் சுகாதார வசதிகள் இல்லையென்று முறையிடப் பட்டதையடுத்து, இவ் வேலைத்தலம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

# கரம்பன் வாசி அல்வாயில்கொலை

நெல்லியடி, வியாழன்

யாழ்ப்பாணத்திற்கு வேலைக்குச் சென்ற வயோதிபர் வீடு திரும்பாது கோயில் வீதியில் காயங்களுடன் இறந்துகிடந்தார்.

ஊர்காவற்றுறை கரம்பன் வாசியான சுப்பர் அம்பலவாணர் (62 வயது) என்பரே இவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரணம் குறித்து, உடுப்பிட்டி மரண விசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரம் விசாரணை நடத்தினார். பருத்தித்துறை சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. என். எஸ். மென்டிஸ் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

இவ்விசாரணையின் போது இறந்தவரின் மனைவியான மகேஸ்வரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''இறந்த எனது கணவரும் நானும் இரு பிள்ளைகளும் அல்வாய் வடக்கிலுள்ள வாடகை வீடொன்றில் வசித்து வந்தோம். மற்றைய மூன்று பிள்ளைகளும் திருமணம் முடித்து வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். தச்சுத்தொழிலை யாழ்ப்பாணத்தில்செய்து வரும் எனது கணவர் வாரத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை வீட்டுக்கு வந்துபோவார்.

''கடந்த வாரம் வீட்டில் இருந்து யாழ்ப்பாணம் சென்றவர் வீடு திரும்பவில்லை. ஒரு வாரம் கழித்து எனது கணவர் அல்வாய் மாலி சந்திப்பிள்ளையார்வடக்கு கோவில் வீதியில் இறந்துகிடக்கக் கண்டதாகப் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் என்னிடம் கூறினார். உடன் அங்கு நான் போய்ப் பார்த்தபோது கணவரின் காதுகளிலிருந்த கடுக்கன்கள் இல்லாமல் தலையிலும் கண் பகுதியிலும் காயங்களுடன் இறந்துகிடந்தார். அவர் உடலில் வெறும் துவாய் மட்டும் இருந்தது.''

அல்வாய் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி என்பவர் சாட்சியமளிக்கையில் அதிகாலையில் தமது தோட்டத்திற்குப் போய் விட்டுத் திரும்பும்போது தாம் இச்சடலத்தைக் கண்டதாகத் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைசெய்த மந்திகை அரசினர் வைத்திய சாலை டாக்டர் ஜே. எஸ். செல்வநாதன் சாட்சியமளிக்கையில் பிடரியிலும் கண்பகுதியிலும் தாக்குதல் காயங்கள்

(7ம் பக்கம் பார்க்க)

### மொஸாம்பிக்கில் பெருவெள்ளம் 300 பேர் பலி

மொபுட்டு, பெப்.17

மொஸாம்பிக்கில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் சுமார் 300 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று மொபுட்டு செய்தி ஒன்று கூறுகிறது.

மொஸாம்பிக்கின் தென் பகுதியில் ஏற்பட்ட இப்பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் உடைமைகளை இழந்து பாதிப்புறுவோர் ஆகியோரை மீட்கும் பணியில் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. [உ]

# கள்ளுத்தவறணையில் வாள்வெட்டுக்கு ஒருவர் பலி

## பயந்துஓடியவர் கிணற்றில்விழுந்து மரணம்

## வேலணையில் சம்பவம்; 3 பேர் கைது

வேலணை, வியாழன்

கள்ளுத்தவறணையில் நடந்த வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார். இச்சம்பவத்தைக் கண்டு பயந்து ஓடிய முதியவர் ஒருவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துமாண்டார்.

இக்கோரச் சம்பவங்கள் நேற்று மாலை வேலணையில் நடந்தது.

வேலணை கள்ளுத் தவறணையில் கள்ளுக்குடித்துக்கொண்டிருந்த சிலருக்கிடையில் பழைய பகைமை பற்றியவாக்குவாதம் ஏற்பட்டதாகவும் திடீரென ஒருவர் வாள் எடுத்து வெட்டியதாகவும் வெட்டுப்பட்ட காங்கேசு சுப்பிரமணியம் (38 வயது) ஸ்தலத்திலேயே மாண்டதாகவும் விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

இதில் திருநாவுக்கரசு என்பவர் காயமடைந்தார்.

அந்நேரம் கள்ளுக் குடித்துக் கொண்டிருந்த 60 வயதான சபாபதி என்பவர் இச்சம்பவத்தைக்கண்டு பயந்து ஓடியதாகவும் வழியில் அவர் ஒரு கிணற்றினுள் தவறிவீழ்ந்து மாண்டதாக் அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் சம்பந்தமாக சொக்கலிங்கம் பூபாலசிங்கம், சின்னத்தம்பி தியாகராசா, அம்பலவாணர் சண்முகரத்தினம் ஆகியோர்சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பால கிருஷ்ணசாமி நாகரத்தினம் என்பவரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

சுப்பிரமணியத்தின் மரணம் பற்றி பதில் நீதவான் திரு. ஏ. எஸ்.நடராசா விசாரணைநடத்தினார். ஊர்காவற்றுறை சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஜெகநாதன் பிரேத பரிசோதனை நடத்தினார், கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இச்சபவம் பற்றி ஊர்காவற்றுறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. து.ஜெயக்குமார் விசாரணை செய்து வருகிறார். திரு. சண்முகநாதன், திரு. பரமநாதன் ஆகிய இருவரும் புலன்விசாரணைசெய்துவருகின்றனர்.

ஒரு மோட்டார் காரையும் பொலிசார் விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளனர்.

### இன்று பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். இலக்கியவட்டம் கடந்த ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசும், நாவல் முதற் பரிசும் பெற்ற திரு. செங்கை ஆழியான், விவேகானந்தசபை விருதுபெற்ற கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை ஆகியோருக்குப் பாராட்டுவிழாவையும் தேநீர்விருந்தையும் இன்று நடத்துகின்றன.

யாழ். மாநகரசபைபொழுது போக்கு மண்டபத்தில் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் திருவாளர்கள் க.சி.குலரத்தினம், சு. இராசநாயகம் ஆகியோரும் இவ்விரு எழுத்தாளர்களையும் பாராட்டுவார்கள். ...... (அ)

### நாவலாசிரியர் அசோகமித்திரன் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவல்நூற்றாண்டு ஆய்வரங்கில் கலந்து கொள்வதற்காக பிரபல நாவலாசிரியரும் எழுத்தாளருமான அசோகமித்திரன் இன்றுமுற்பகல் யாழ்ப்பாணம் வருகிறார்.

திருச்சியிலிருந்து வரும் நாவலாசிரியர் அசோகமித்திரன் இன்று முற்பகல் 10-30க்கு பலாலிக்கு வந்து சேருவார்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத் தமிழ்த்துறை தமிழ் நாவல் நூற்றாண்டு விழா ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை வளாகத்தின் இராமநாதன் மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

இந்த ஆய்வரங்கில நாவலாசிரியர் அசோகமித்திரன் ''இந்திய நாவல் இலக்கியம்'' பற்றி கட்டுரை வாசிப்பார்.

### காசி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைகள் என்று பல்லாயிரக் கணக்கானோர் நின்று வாழ்த்துத் தெரிவித்து வரவேற்றனர். இளைஞர் பலர் இரத்தத் திலகமிட்டனர்.

மட்டக்களப்பில் சமீப காலத்தில் கண்டிராத அளவுக்கு இந்த வரவேற்பிருந்தது.

களுதாவளையிலும் கோட்டைக்கல்லாற்றிலும் நடந்த இரு கருத்தரங்குகளிலும் இவர்கள் கலந்துகொண்டனர்.

### படகு விபத்து: 100 பேர் பலி

டாக்கா, பெப். 17

பங்களாதேஷில் இடம் பெற்ற படகுவிபத்துஒன்றில் 100 பேர் கொல்லப்பட்டனர்.

டாக்காவுக்கு 300 கிலோமீட்டர் தொலைவில் இந்தவிபத்து நடந்தது. இரு படகுகள் மோதிக்கொண்டதில்விபத்து ஏற்பட்டது. குறிப்பிட்டபடகில் 136 பிரயாணிகள் இருந்ததாகக் கூறப்பட்டது. (ஆ)

## மரண அறிவித்தல்

### ஐ. முத்துச்சாமி குருக்கள்

உடுவில் ஐ. முத்துச்சாமிக் குருக்கள், ஞானவைரவ கோவில் ஆதீனகர்த்தரும், அகிலஇலங்கை சைவாகம பிரசாரகருமாகிய சைவப்பெரியார் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு (17-2 77) சிவபதமெய்தினார். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம். 18-2-77 காலை ஈமக்கிரிகைகள் நடைபெறும்.

இங்ஙனம்
மு. சாரங்கபாணி சர்மா,
மு. நவநீதனுகேந்திர சர்மா.
[புத்திரர்கள்]

5502

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் திருநாவுக்கரசு

ஆனைக்கோட்டை சுவிற்லான்ட்ஸ் உரிமையாளர் நாகலிங்கம் திருநாவுக்கரசு காலமானார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகச்சந்திரன், பாலச்சந்திரன், சுரேந்திரசந்திரன், திருஞானச்சந்திரன், தில்லைச்சந்திரன், கிருஷ்ணரஞ்சனி, புஷ்பரஞ்சனி, திருஞானரஞ்சனி, தில்லைரஞ்சனி ஆகியோரது அருமைத் தந்தையும், ஆனைக்கோட்டை சிவபாக்கியத்தின் அன்பு மாமனுரும், திருமதிகள் கண்மணி, பராசக்தி, காலஞ்சென்ற திரவியம் ஆகியோரது அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் 18-2-77 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். உறவினரும் நண்பரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

5503

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டுபெப்ரவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna Telegram: Eelanadu Telephone 389. Registered as a Newspeper in Srilanka.